


# மணிமகுடம்

## மணிவிழா மலர்

திருமதி நவமணி சந்திரசேகரம்

# மணிமகுடம்

மணிவிழா மலர்

02.08.2014



# மணிமகுடம்

## மணிவிழா மலர்

திருமதி நவமணி சந்திரசேகரம்

# மணிமகுடம்

யா/இமையாணன் அ.த.க.
வித்தியாலய முன்னாள் அதிபர்
திருமதி சந்திரசேகரம்
அவர்களது

**மணிவிழா மலர்**

**02.08.2014**

## மணிமகுடம்

மணிவிழா மலர்


| | |
|---|---|
| மலரின் பெயர் | :- மணிவிழா மலர் |
| வெளியீடு | :- மணிவிழாக்குழு |
| முகவரி | :- யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம் |
| ஆலோசனைக்குழு | :- திரு கு.ரவீந்திரன்<br>திரு ம.குட்டித்தம்பி<br>திருமதி க.பவளராசா |
| மலர்க்குழு | :- திரு மா.செல்வதாஸ்<br>திரு த.விஜயசங்கர்<br>திரு ந.கஜேந்திரன்<br>திரு வே.அகிலன்<br>திரு தி.ஜெயபிரகாஷ்<br>திரு கு.குணாளன் |
| பதிப்பு | :- 02.08.2014 |
| புகைப்படங்கள் | :- திரு ஆ.வினோதன் |
| அச்சுப் பதிப்பு | :- ஆகாயம் பதிப்பகம்,<br>இமையாணன். |

## மலரின் உள்ளே....


01. நுழைவாயில்

02. ஆசிச் செய்திகள்

03. வாழ்த்துச்செய்திகள்

04. மணிவிழா நாயகியின் வாழ்வும் பணியும்

05. பதிவுகள்

## பாடசாலைக் கீதம்

இராகம்:- ஹம்சத்வனி　　　　　　　　　　தாளம்:- ஆதி

இமையாணன் வித்தியாலயம் – அது என்றும் என்றும்
வாழிய வாழியவே யா இமையாணன் வித்தியாலயம்
ஏமையாள் இறைவன் பதம் போற்றி
கலையாவும் கற்போம் நிதம் ஏற்றி　　　　(இமையாணன்...)

மெய்ப்பொருள் காண்பது அறிவென கொள்வோம்
மேதினி போற்றிடும் உயர்நிலை எய்துவோம்
செப்பிடும் அறிவியல் திறன் பல கற்போம்
செந்நெறி காட்டிடும் வழியினில் நிற்போம்　　　　(இமையாணன்.....)

உடலையும் வளர்ப்போம் உள்ளத்தையும் வளர்ப்போம்
உலகினை வளர்க்கும் உழவையும் வளர்ப்போம்
திடமுடன் நூறு தொழில் பலவும் செய்வோம்
செந்தமிழ் கலைகள் வளர்த்து நாம் உய்வோம்　　　　(இமையாணன்.....)

அன்பொடு அகிம்சை வழியினில் செல்வோம்
யாவரும் ஒன்றென நெறியினைக் கொள்வோம்
ஒன்றென இறைவனை போற்றி நாம் வெல்வோம்
ஒற்றுமை தியாகம் ஒளி பெற வாழ்வோம்　　　　(இமையாணன்......)

**இயற்றியவர்**
காரை. ந. சுந்தரம்பிள்ளை

**இசையமைத்தவர்**
திருமதி. கீ. கிரிதரன்




ஆசிரியர்கள் சகிதம் விழா நாயகி

# நுழைவாயில்

கல்வியுலகில் அரும்பணியாற்றி அகவை அறுபதுதனில் இளைப்பாறிச்செல்லும் எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களின் சேவைதனை நயக்கும் முகமாக இம் மணிவிழா மலர் வெளிவருகின்றது. தனது கல்விச்சேவையின் பெரும்பகுதியினை ஆசிரியர், அதிபர் என்ற நிலையில் எமது பாடசாலையில் ஆற்றியவர் எமது அதிபர். இவரது காலம் பாடசாலைக்கு மிகப்பெறுமதியான காலம். கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் என்ற சகல விடயங்களிலும் எமது பாடசாலை மாணவர்கள் பல்வேறு சாதனைகளை நிலை நாட்டுவதற்கு உறுதுணையாய் இருந்தவர் இவரே. இவரது பணிகள் போற்றுதற்குரியன.

அவ்வகையில் இம்மணிவிழா மலரினுள்ளே மணிவிழா நாயகியின் மீதான ஆசிகளும் வாழ்த்துக்களும் மணிவிழா நாயகியின் வாழ்வும் பணியும் பாடசாலையில் நிகழ்த் தப்பட்ட சாதனைகள் போன்றனவும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. அவ்வகையில் இந்நூலுக்கான ஆசிகள் மற்றும் வாழ்த்துரைகளை வழங்கிய பெருந்தகைகளுக்கும் நூலாக்கத்திற்கான தகவல்களைத் தந்துதவிய விழா நாயகிக்கும் மற்றும் பாடசாலைச் சமூகத்திற்கும் சிறந்த முறையில் அச்சுப்பதித்துத் தந்திருக்கும் ஆகாயம் பதிப்பகத்தினருக்கும் நன்றிதனைக் கூறிக்கொள் கின்றோம்.

– மலர்க்குழு –

# ஆசிச்செய்திகள்



**அகில உலக சைவக்குருமார் சம்மேளன இந்து மத குரு பீடாதிபதியின் ஆசிச் செய்தி**

யா/இமையாணன் அ.த.க வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களின் மணிவிழா மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன். மணிவிழா நாயகி தானெடுத்த முயற்சியில் மாபெரும் வெற்றி கண்டு தனது சாதனையினை நிலை நாட்டியதை பத்திரிகை செய்தி மூலம் அறிந்து அகமகிழ்ந்த நலன் விரும்பிகளில் அடியேனும் ஒருவர் என்பதை தெரிவிப் பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவர் தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத் தாரோடு நிறைந்த மனச்சாந்தியுடன் நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் சேவையை ஆவணப்படுத்தும் விதத்தில் வெளி யிடப்படும் மணிவிழா மலர் மலர்ந்து நறுமணம் வீச அடியேனின் நல்லாசிகளை தெரிவித்து அமைகின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"


சிவஸ்ரீ.சோமஸ்கந்த.தண்டபாணிக தேசிகர் J.P
பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி
அம்மன் தேவஸ்தானம் வல்வெட்டித்துறை
ஆதீனகர்த்தாவும்,பிரதம குருவும்
புற்றளைச்சித்தி விநாயகர் தேவஸ்தானம்)



எண்ணென்ப ஏனைய எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு
(குறள் 392)

எண்ணென்று சொல்லப்படுவதும் எழுத்து என்று சொல்லப்படுவதும் இவ்வுலகில் வாழும் மக்களுக்கு கண்ணென்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். உலகில் மனிதம் மாண்புற கல்வி என்னும் கண் சிறப்புப் பெறுகின்றது. இச்சிறப்பை அறிபவர்கள் குருவாகப் போற்றப்படு கின்றனர். அவ்வாறு போற்றுதற்குரியவராய் மதிப்புக்குரிய திருமதி நவமணி சந்திர சேகரம் அவர்கள் விளங்குகிறார். தனது மேன்மை மிக்க பணியில் ஆசிரியர், அதிபர் என்ற நிலையில் 36 வருடங்கள் சேவை செய்து பல மாணவர்களை உலகின் கண்களாக்கியிருப்பது மேன்மையே. இறைபற்றுடையவராய் இருந்து எல்லோரும் விரும்பத்தக்க திறமை வாய்ந்த ஆளுமை உடையவராய் தன் சேவைக் காலத்தை முடித்து நிற்பது நம் எல்லோ ருக்கும் மகிழ்வானது மாத்திரம் அல்ல இறைவன் கொடுத்த மேன்மை மிக்க பணியைச் செய்து நிறைவு செய்ததானது இறைவன் அடையும் மகிழ்ச்சியாகும். எனவே நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் பெற்று வாழ வாழ்த்து கின்றேன்.

அருட் திரு நே.து.ஜெயநேசன்
தென்னிந்திய திருச்சபை
உடுப்பிட்டி



# வடமாகாண கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

த.குருகுலராசா
அமைச்சர்
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை ,
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகண சபை.

எமது பண்பாட்டிலே ஒருவரது வாழ்க்கையின் சாதனைகளைப் பிரதிபலிக்கும் வகையிலே பல விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். இவற்றிலே மணிவிழா என்பது ஒருவரது வாழ்வு, அவர்களின் பணிகள், சாதனைகள் என்பவற்றை அவர் வாழும் காலத்திலேயே அவரைப் பாராட்டவும், ஏனையோருக்கு அவரை வழிகாட்டியாக்கவும் பேருதவியாக அமைகின்றது. இத்தகைய மணிவிழாவினைக் காணும் நாயகி திருமதி.நவமணி சந்திரசேகரம் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் பேருவகையடைகின்றேன்.

அகவை அறுபதை நிறைவு செய்யும் திருமதி. நவமணி சந்திரசேகரம் அவர்கள் யாழ்ப்பாணம் இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக தனது 30 வருட சேவையில் மாணவர்களின் அபிவிருத்தியிலும் பௌதீக வள அபிவிருத்தியிலும் சிறந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளைச் செய்து மணி விழாக்காணும் நாயகியை சிறப்பிக்கும் முகமாக நடைபெறும் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசசேவையிலே மூன்றரை தசாப்த காலத்திற்கு மேலாக சேவையாற்றி பெருமைக்குரிய நாயகியாகத் திகழ்கின்ற இவர், ஆசிரியராக, ஆசிரியமாணவியாக. அதிபராக தனது கல்விச்சேவையை வழங்கியதோடு பொதுச்சேவையிலும் சமயப்பணியிலும் ஈடுபட்டதோடு, எத்தனையோ மாணவர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்து, நற்பிரஜைகளை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்

இறைபக்தியும் மனித நேயமும் நிறைந்து விளங்கும் இவர் குடும்பத்துடன் நீடூழி வாழவும் தனது சேவைகளில் மேலும் சிறந்து விளங்கவும் இவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென இறைவனை வேண்டி மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றேன்.



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி


**ஆ.ராஜேந்திரன்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.


"நல்ல அதிபர் உள்ள கூடாத பாடசாலையும் இல்லை, அதேபோல் கூடாத அதிபர் உள்ள நல்ல பாடசாலையும் இல்லை" என்பர் கல்வியியலாளர். வடமராட்சிப் பிரதேசத்தில் நல்ல பாடசாலை என்ற அடையாளத்தைப் பெற்ற பாடசாலைகளுள் யா/இமையாணன் அ.த.க வித்தியாலயமும் ஒன்றாகும். இப்பாடசாலை நல்ல பாடசாலை என்ற பெயரைப் பெற முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர்கள் பலர் இவர்களுள் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்கள் குறிப்பிடத் தக்கவர் ஆவார்.

தொண்டு அடிப்படையில் தனது ஆசிரிய சேவையை இப்பாடசாலையில் ஆரம்பித்த இவர் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது இம் மாணவர்களின் கல்விக்கு உழைத்துள்ளார்.பின்னர் நிரந்தர ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் அறிவு,ஆற்றல் காரணமாக மிகச் சிறப்பாக துலங்கினார். கணித பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் அப்பாடத்தை மாணவர் விருப்புடன் கற்க வழிகாட்டினார். தலைமன்னார் பிரதேசத்தில் இவர் கடமையாற்றிய காலப்பகுதிக்கான பரீட்சை பெறுபேறுகள் இவரின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.

ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் வெளிப்படுத்திய சிறந்த தேர்ச்சிகள் காரணமாகத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் உதவி அதிபராகத் தன்னை வடிவமைத்துக் கொண்டார். இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து தொடர்ந்து அச்சேவையின் உயர்தரத்தைப் பெற்றார். தரத்திற்கேற்ப தனது கருமங்களையும் வடிவமைத்துக் கொண்டார்.

நான் வடமராட்சி பிரதேசத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் இருந்து இவரின் பன்முக ஆற்றல்களையும் திறன்களையும் அவதானித்து வந்துள்ளேன். நல்லதொரு குடும்பத்தில் நல்லதொரு சகோதரிகளுடன் பிறந்த இவர்கள் நற்குணங்களும் வாய்க்கப்பெற்றிருந்தனர். குறிப்பாக திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்கள்

சிறப்பான ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்தி வந்துள்ளார். நல்ல அதிபர் ஒருவருக்கு உரித்தான நற்பண்புகள் பல இவரிடம் காணப்பெற்றன.

மாணவர் மீது காட்டுகின்ற அன்பு அவர்களின் கல்வி மீதான அக்கறை, அவர்களின் நடத்தையில் கொண்ட கரிசனை , அன்பான பேச்சு, ஆசிரியர்களை அரவணைத்துத் தொழிற்பட வைக்கும்திறன், பெரியவர்களையும் மேலதிகாரிகளையும் மதிக்கும் பெருந்தன்மை, அவர்களின் வழிகாட்டல்களையும் பின்பற்றி நடக்கும் தன்மை என நல்ல பண்புகள் பலவற்றைக் கொண்டிருந்தார்.

கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தை எமது பிரதேசத்தின் ஏழை மாணவர்களின் கல்விக்கென அர்ப்பணித்துள்ளார். அவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டியுள்ளார். அவர்களின் தாழ்வின் போது தோள் கொடுத்துள்ளார். இமையாணன் பாடசாலை சமூகத்தைச் சேர்ந்த அனைவராலும் மதிக்கப்பட்ட இவர் அவர்களின் நல்ல கணிப்பையும் பெற்றிருந்தார்.

இவர் கல்வி உலகிற்கு ஆற்றிய சேவை மதிக்கப்பட வேண்டும். வசதியான இடத்தை நாடாது கல்வித்தேவையுள்ள இடத்தில் நீண்ட காலம் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். நல்ல அதிபர் ஒருவர் நல்ல பாடசாலையொன்றை உருவாக்கிய பெருமையே மிகப்பெருமை மிக்க ஒன்றாகக் கருதுகின்றேன். இவரின் பணியைப் போற்றுகின்றேன் வாழ்க அவரின் நாமம், வளர்க யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் பெருமை.







# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

**சி.நந்தகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

அகவை அறுபதுகளில் மணி விழாக் காணும் திருமதி. நவமணி சந்திரசேகரம் (SLPSI) அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

இமையாணன் அ.த.க. பாடசாலையில் பயிற்றப்படாத ஆசிரியராக 1978 ம் ஆண்டில் இணைந்த திருமதி ந.சந்திரசேகரம் இலங்கை அதிபர் சேவை தரம் - I என்ற உயர்வான பதவியுடன் ஓய்வு பெறுவது பெருமைக்குரியது.

தனது 36 வருட கல்விச் சேவையில் எல்லோர் மனதிலும் உயர்வான பண்பான அதிபர் என்ற பெருமையைப் பெற்றவருக்கு எனது வாழ்த்துக்கள்.

ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பல்பரிமாணமிக்க சேவையால் கரவெட்டி கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மத்தியில் என்றும் மாறாத உயர்வான நன்மதிப்பை பெற்றவருக்கு எனது வாழ்த்துக்கள்.

தனது 36 வருட கல்விச் சேவையில் 5 ஆண்டுகள் மன்னார் மாவட்டத்தில் சேவையாற்றியதோடு இமையாணன் அ.த.க பாடசாலையில் 29 ஆண்டுகள் பெரும் சேவையாற்றி இப்பாடசாலையின் வளர்ச்சியோடு தன்னை முழுமையாக அர்ப்பணித்த சேவைக்குரியவருக்கு எனது வாழ்த்துக்கள்.

தனது 60 வருட வாழ்வியலில் அரைப்பகுதியை இமையாணன் பிரதேச மக்களோடு அர்ப்பணித்த உயர் சேவை நாயகிக்கு எனது வாழ்த்துக்கள்.

இவரது ஓய்வுடன் வடமராட்சி வலய பாடசாலைகளில் இலங்கை அதிபர் சேவை தரம் I ஐ சேர்ந்த அதிபர்தரத்தில் உள்ளவர்களின் சேவை நிறைவு பெறுவது வடமராட்சி வலயத்திற்கு பாரிய இடைவெளியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அதிபராக இணைந்து தனது குறுகிய கால சேவையோடு ஓய்வு பெறும் திருமதி நவமணி சந்திரசேகரம் தனது ஓய்வு காலத்தில் நலமுடனும், நீண்ட ஆயுளுடனும் குடும்பத்தோடு மன நிறை வோடும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.



# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

**எஸ்.சிவஸ்ரீ**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களுக்கு இமையாணன் அ.க.க. வித்தியாலய சமூகத்தினர் மணி விழா எடுத்து வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்கள் இப்பாடசாலையில் சில காலம் ஆசிரியராகவும் நீண்டகாலம் அதிபராகவும் கடமையாற்றியிருந்த ஒருவர் என்ற வகையில் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் உருவாகவும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் தங்கம் வென்று தேசியவிருது முதல் மாகாண மட்ட, வலயமட்ட, கோட்ட மட்டம் என பல மட்டங்களில் விருதுகள் பலவற்றையும் பரிசுகளையும் வெல்லக்காரணமாக இருந்தமை பலருக்கும் தெரிந்த விடயமாகும்.

எமது பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதேசத்திலேயே இத்தகு பல சிறப்புகள்; ஏற்படக்காரணமாக இருந்துள்ளமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இவர் இப்பாடசாலையில் சுமார் மூன்று தசாப்தகாலம் கடமையாற்றியவர் என்ற வகையில் இவருக்கும் சமூகத்துக்குமான நல்லுறவு, சேவைச்சிறப்பு என்பன சொல்லித்தெரிய வேண்டிய விடயமில்லை. இவர் தன் ஓய்வு காலத்தில் தனது குடும்பத்துடன் ஆரோக்கியத்துடனும் சந்தோசத்துடனும் வாழ இறையருளை வேண்டிக்கொள்வதோடு ஓய்வு நேரத்திலும் தன்னால் இயன்ற சமூகசேவையினையும் செய்து சிறப்புற்றிருக்க வாழ்த்துகின்றேன்.



# பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

**யோ. ரவீந்திரன்,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(நிர்வாகம்),
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

*"திறமையா லிங்கு மேனிலை சேர்வோம்*
*தீய பண்டை யிகழ்ச்சிகள் தேய்ப்போம்"*

என்ற பாரதியின் வரிகளுக்கு வலுச்சேர்த்து மணி விழாக் காணும் திருமதி நவமணி சந்திரசேகரம் அதிபர் தரம் - I அவர்களது சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன்.

க்டந்த மூன்று தசாப்தங்களாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பாடசாலை நிர்வாக கட்டமைப்பின் பல்வேறு பரிமாணங்களிலும் தனது ஆளுமையினை வெளிக்காட்டி மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர் என அனைத்து தரப்பினரதும் பாராட்டுக்களைப் பெற்றவர் திருமதி சந்திரசேகரம் அவர்கள். தனது சேவைக் காலத்தை வசதி வாய்ப்புக்கள் குறைந்த, கல்வியின் தேவையினை பெரிதும் நாடி நிற்கும் பிரதேச மாணவர்களது அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்கு முன்னின்று அர்ப்பணிப்புடன் உழைத்த கல்வியியலாளர் இவர்.

பாடசாலையின் ஆளணி, பௌதீக வளத்தேடலில் அவரது பங்களிப்பு அளப்பரியது. மாணவர்களது சமநிலை ஆளுமை விருத்தியில் கூடிய கவனம் செலுத்துவதில் எமது அதிபர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தார் என்றால் அது மிகையில்லை.

நல்லாசிரியரே சிறந்த நிர்வாகியாக பரிணமிக்க முடியும் என்பது இவரது சேவைக்காலத்திலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

"கடமை செய்வீர், நம் தேசத்து வீரக்
காரி கைக்கணத் தீர், துணி யுற்றே."

என வாழ்த்துவதுடன், இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல சந்நிதியான் அருளை வேண்டி நிற்கிறேன்.



## சேவை நலன் வாழ்த்துக்கள்

**அ.ஸ்ரீகரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி

வடமராட்சி வலய பாடசாலையான யா/இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் அதிபராக சேவையாற்றி மணிவிழாக் காணும் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இவருடைய 36 வருட கல்விப் பணியிலே நல்லாசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக படிவளர்ச்சி பெற்று இலங்கை அதிபர் சேவையில் தரம்-Iல் தனது சேவையை பதித்து நிறைவு செய்கிறார். இவரது சேவைக் காலத்தில் 29 வருட சேவையினை யா/இமையாணன் அ.த.க வில் சிறப்புச் சேவை ஆற்றி இப் பாடசாலையின் ஆசிரியர்களது வாண்மை, மாணவர்களது அடைவு உயரவும் நல்லொழுக்கம் சிறக்கவும் அரும்பாடு பட்டார்.

சமூகத்தின் நன்மதிப்பை பெற்று சமூகத்தோடு இணைந்து பாடசாலையின் வளர்ச்சியினை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்ட பெருமை இவரையே சார்ந்தது.

பாடசாலை வளர்ச்சியில் இணைப்பாட விதான செயற்பாடுகளில் பல மட்டங்களில் மாணவர்களை பங்குபற்ற வைத்து மாணவர்களை வெற்றியீட்டச் செய்த பெருமையும் இவரையே சார்ந்தது.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியினை சிறப்பிக்க அப்பாடசாலையின் அதிபர் கடமையை ஏற்று குறுகிய காலத்தில் சிறப்பான சேவையாற்றி ஓய்வு பெறும் மணிவிழா நாயகி திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களை ஓய்வு காலத்தில் சமூகப்பணியில் தன்னை இணைத்து சிறப்புற வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.



# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

**க.பொன்னையா**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தின் கல்விப்புலத்தில் 36 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி இன்றுடன் அகவை அறுபது பூர்த்தியடைந்து ஓய்வு பெறும் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களுக்கான மணிவிழா தொடர்பில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

கல்விப்புலத்தில் ஆசிரியராக, அதிபராக பணியாற்றிய இவரது அனுபவத்தாலும் கடமைகளைச் செவ்வனே ஆற்றும் திறனாலும் யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலப்பகுதியில் 2001 ஆம் ஆண்டு பாடசாலையானது “அறிவின் சிகரம்” என பெருமைப்படுத்தப்பட்டது. பாடசாலையின் வளர்ச்சி, கிராமத்தின் வளர்ச்சி என்பதனை தனது சேவைக் காலத்தில் நிறுவிக்காட்டிய பெருமை இவரையே சாரும்.

இவரது கல்விப்பணியைப் பாராட்டுவதோடு எதிர்காலத்தில் தொடர்ந்தும் இவரது பணி கல்விப்புலத்தில் தொடர வேண்டும் என்பதோடு தனது குடும்பத்தாருடன் சிறப்புற வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசி கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.



## சாதனை நாயகி நவமணி

**மா.குட்டித்தம்பி**
முன்னாள் அதிபர்
யா/இமையாணன் அ.த.க.வி

வடமராட்சி கல்வி வலயத்தில் கரவெட்டி பிரதேசத்தில் சங்கிலிய மன்னனின் தளபதி இமையாணன் நிர்வகித்த பிரதேசத் திலுள்ள யா/ இமையாணன் அ.த.க.வித்தி யாலயத்திலிருந்து பிரிவுபசாரமும் அவரது 60 வது வயதில் மணிவிழாக்காணும் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களின் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 29 வருடங்களாக இப்பாட சாலையின் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றித் தனது கல்விச்சேவையில் கால் நூற்றாண்டிற்கு மேலாகப் பல்வேறு சாதனைகளுக்கும் நாயகியாக இருந்து யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்து தனது கண்ணியமான நேர்மையான வியத்தகு சேவையில் எல்லார் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்று போற்றப்படுபவராவர்

இன்றைய நவீன கல்வி முகாமைத்துவ செயற்பாடுகளை நன்கு அறிந்து கொண்டு ஆசிரியர்களுக்குச் சிறந்த தலைமைத் துவத்தை வழங்கி பாடசாலைப்பெற்றார், பழைய மாணவர், நலன் விரும்பிகளை உள்வாங்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிறைவான பங்களிப்பினை வழங்கியுள்ளார். தனது சேவைக்காலத்தில் பாடசாலைக்குத் தேவையான பௌதீக வழங்களை அதிகரித்ததுடன் மாணவர்

களையும் ஆசிரியர்களையும் கல்வி யிலும் இணைபாடவிதானச் செயற் பாடுகளிலும் ஈடுபடுத்தி வலயம், மாகாணம், தேசிய மட்டங்களில் சாதனைபுரிந்து பாட சாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை யினைத் தேடித்தந்தது குறிப்பிடத்தக்க தாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழையமாணவர் சங்கம், வெளிநாட்டுப் பழையமாணவர் நலன்விரும்பிகள் சங்கம், ஆசிரியர் கழகம், கல்விச் சமூகம் என அனைவருடனும் நல்லுறவினைப் பேணி பாடசாலை நிர்வாகத்தைச் சிறப்பான முறையில் எடுத்துச் சென்று மாணவர் களிடையே ஆசிரியர்களிடையே நற் பண்புகள், நல்லொழுக்கம், நேர்மனப் பாங்கு, சமூக விழுமியங்களை மதித்து நடக்கும் ஆசிரியர்களையும் மாணவர்க ளையும் உருவாக்கிய பெருமை அவர்களது சிறந்த முகாமைத்துவத்திற்குக் கிடைத்த பேறாகும்.

திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்கள் கணித ஆசிரியராக முதல் நியமனம் பெற்று மூன்று தலைமுறைகள் பயன்பெற அரும்பாடுபட்டார். அவர்கள் இலங்கை அதிபர்சேவையின் பரீட்சையில் 1991 ல் சித்திபெற்று 1995 ல் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் வாய்ப்புப் பெற்றார். பௌதீக வளங்களால் மிகக் குறைவான நிலையிலும், சில காலங்களில் கடும் குளிர், கடும் வெப்பம், கடும்காற்று, மழைகாலத்தில் வகுப்பறைக் கொட்டகை கள் தாக்குப்பிடிக்காது, நிலம் சதுப்பாகி விடும், கொடிய யுத்தம் போன்றன இன்னொரு புறத்தில் இருந்த போதும் மாணவர்களது கல்வி, இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் அதிபர் ஆசிரியர்கள் கடுமையாக உழைத்தார்கள் இதனால் பாடசாலை வலயம், மாகாணம், தேசியம் என்பவற்றில் உச்சம் அடையச் செய்தார்கள்.

கொட்டிலும் குடிசையுமாக இருந்த பாட சாலையை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக கட்டடங்கள், மாடிக்கட்டடங்களாக மாற்றி அமைத்து நல்ல கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் சுவிஸ் பழையமாணவர் நலன் விரும்பிகளுடன் நல்லுறவை ஏற்படுத்திப் பாடசாலைக்கு நாலாபுறமும் சுற்றுமதில் அமைத்து நற்பாதுகாப்பு ஏற்படுத்தியுள்ளார். அத்தோடு பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சுவிஸ் பழைய மாணவர் நலன் விரும்பிகள் நிதியுதவியுடன் மேலதிக வகுப்புக்களை நடாத்தி அடைவுமட்டத்தை அதிகரிக்கச் செய்துள்ளார். தனது அயராத உழைப்பினாலும் மற்றவர்களை அரவ ணைத்து காரியங்களை சாதிக்கும் திறனாலும் தேசிய மட்டத்தில் கணிக்கப் படும் நிலையைக் கொண்டு வந்துள்ளார். அவரது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் எப்போதும் உத்வேகம் காணப்பட்டமையால் பாடசாலை இன்று வரை முன்னோக்கிச் செல்ல வழி காட்டியாக இருந்தார்.

இவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் தனது சேவை குறித்து திருப்தியும் மகிழ்ச்சியும் கொள்வார் என்பதில் ஐயமில்லை. தனது கல்விச்சேவையை ஓய்வுக்காலத்தில் தொடரவும் ஆரோக்கியத்துடனும் மன நிறைவுடனும் வாழவும் வாழ்த்தி நீண்ட காலம் வாழ இறைவனை வேண்டு கின்றேன்.



# அதிபரின் வாழ்த்துச் செய்தி


**திரு.கு.ரவீந்திரன்**
யா/இமையாணண் அ.த.க
வித்தியாலயம்
வல்வெட்டித்துறை


வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் முருகன், அம்மன் ஆலயங்களில் உள்ள தெய்வங்கள் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மாட்சிமை பொருந்திய பதியிலே யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம் அமைந்துள்ளது. ஒரு கிராமத்தின் இரண்டு கண்களாக அமைபவை ஆலயம், வித்தியாலயம் ஆகியனவாகும் இவை இரண்டும் அமைந்திருப்பது இமையாணன் கிராமத்தின் சிறப்பாகும். ஆலயம் போன்றே வணக்கத்திற்கும் புனிதத்திற்கும் உரிய இடம் வித்தியாலயம் ஆகும். அவ்வாறான சிறப்பு மிக்க எமது யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம் தற்போது ஓய்வு நிலையிலுள்ள முன்னாள் அதிபர் திரு ம.குட்டித்தம்பி அவர்களுடைய காலத்திலே, பல சவால்களுக்கு முகம் கொடுத்து கல்வி நிலையிலே மிளிர்ந்தது என்றால் அது மிகையாகாது. அவரால் கட்டிக்காத்து வழி நடாத்தப்பட்ட இவ்வித்தியாலயம் அவருக்குப்பின் மணிவிழா நாயகி ஆகிய திருமதி நவமணி.சந்திரசேகரம் அவரிகளிடம் கையளிக்கப்பட்டது. இவர் தனது சேவைக் காலமாகிய 36 வருடங்களில் 29 வருடங்கள் இவ்வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் அதிபராகவும் கடமையாற்றி உள்ளார்.

அன்பும் அரவணைப்பும் கொண்ட இவர் எப்போதும் புன்முறுவல் பூத்த முகத்துடனேயே காணப்படுவார். பாடசாலைப் பணிகளைப் பரவலாக்கம் செய்து தனது ஒருங்கிணைக்கும் சிறந்த ஆற்றலால் முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஆளுமை மிக்கவர்

*"இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந்துஅதனை அவன் கண் விடல்"*
என்ற வள்ளுவரின் வாக்குக்கு இணங்க பொருத்தமானவரிடம் பொருத்தமான பணிகளை ஒப்படைத்து செயற்படுத்தக் கூடிய வல்லமை கொண்டவர்.

சாதாரண கொட்டகைகளாக இருந்த இப் பாடசாலை மாடிக்கட்டிடங்களாக தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால் இவரின் விடா முயற்சியே இதற்குக் காரணம் எனக் குறிப்பிடலாம். வடமாகாணக்கல்வித் திணைக்களம், வடமராட்சிக் கல்வி வலயம், கரவெட்டிக்கோட்டம், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் அனுசரணை எமது பாடசாலைக்குக் கிடைத்த வரப் பிரசாதமாகும். பாடசாலைத் தேவைகளை இனம் கண்டு அவற்றைச் சுட்டிக் காட்டி மேற்படி நிறுவனங்களினூடாக பௌதீக வளரீதியாக பாடசாலையை வளர்த்த பெருமை இவரையே சார்ந்தது.

மணிவிழாக் காணும் அதிபர் திருமதி ந.சந்திரசேகரம் அவர்கள் நீண்ட காலம் இங்கு கடமையாற்றியமையினால் இமையாணன் கிராமத்திலே பெரும்பாலான வீடுகளில் அரச நிறுவனங்களில் கடமையாற்றும்பல உத்தியோகத்தர் களைக் காணக்கூடியதாக உள்ளது இவருடைய சேவை காரணமாக அவர்கள் எமது பாடசாலைக்கு பல்வேறு வகைகளில் உதவி வருகின்றார்கள் என்றால் அது மணிவிழா நாயகி அவர்களுடைய பணியினால் ஏற்பட்ட உந்து சக்தி என்றே குறிப்பிடலாம். இவருடைய சேவைக் காலத்தில் கல்வி கற்று வெளியேறிய மாண வர்கள் பலர் இன்று பல்கலைக்கழகங்களில் கற்று பட்டதாரிகளாகியுள்ளனர். இன்னும் பலர் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

பாடசாலையில் நூலகச் செயற்பாடுகள் சிறப்பாக நடை பெற சிறந்த நூலகம் ஒன்றையும், விஞ்ஞானச் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற விஞ்ஞான கூடம் ஒன்றையும், கணனிச் செயற்பாடுகள் திறம்பட நடைபெற கணனி கூடம் ஒன்றையும் தனது கடின முயற்சியினால் மழை, வெயில், பனி பாராது உதவிபெற வேண்டியவர்களிடம் சென்று அரும் பாடுபட்டு அவற்றை அமைத்த பெருமை இவரையே சாரும்.


எந்த கடின விடயங்களாயினும் அதனை ஆசிரியர்களுக்கு பக்குவமாய், பண்பாக, அன்பாக எடுத்துக்கூறி முடிக்ககூடிய ஆற்றல் காரணமாக ஆசிரியர்களிடத்தே இவர் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ளார். மாணவர்கள் மத்தியில் இவருக்கு என தனி மதிப்பு உண்டு.

ஆசிரியர் வாண்மை விருத்திக்காக அவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தி அவர்களுடைய கல்வித்தகமை என்பவற்றை உயர்த்துவதற்கு ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தியுள்ளார்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் தேசிய மட்டம் வரை செல்வதற்காக நீண்டகாலப் போக்கிலான திட்டங்களை, பயிற்சிகளை வழங்கி ஆசிரியர்கள், மாணவர்களை உற்சாகப்படுத்தி வழி காட்டும் சிறந்த செயற்றிறன் கொண்டவர் ஆவார்.

திருமதி ந.சந்திரசேகரம் அவர்கள் முன்னெடுத்த இப்பணிகள் தற்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பாடசாலையின் தொடர்ச்சியான ஆலேசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டு கொள்கின்றேன்.

ஓய்வு காலத்தில் அவர் சீரும் சிறப்புடனும் ஆரோக்கியமாக வாழ்ந்து தனது ஆற்றல்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தி சமூகத்தை வளர்க்க ஆவன செய்ய வேண்டும் எனவும் அன்பாகவும்,பணிவாகவும் கேட்டுக் கொள்கின் றேன்.



# கிராம அலுவலரின் வாழ்த்துச் செய்தி

**த.சுதர்சன்**
கிராம உத்தியோகத்தர்
இமையாணன்

தானங்களில் சிறந்தது வித்தியாதானம் என்பார்கள் அந்த வகையில் மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை அர்ப்பணிப்புடன் வழங்கியவர் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம். அவர் ஒரு நல் ஆசிரியையாகவும், அதிபராகவும் தனது கல்விப்பணியை கடமையுணர்வுடனும் பற்றுறுதியோடும் ஆற்றியவர். ஒரு கிராமத்தின் ஆரோக்கியமான முன்னேற்றத்திற்கு பக்க பலமாக இருப்பதே பாடசாலையாகும் பாடசாலை அதிபர் பதவி என்பது பாரிய சவால் மிக்கதாக விளங்குகின்ற இன்றைய கால கட்டத்தில் மணிவிழாக் காணுகின்ற அதிபரின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன். அவர் தனது ஒய்வு காலத்தில் தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து சமூகப் பணிகளிலும் ஈடுபட வேண்டி நிற்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.



# பழைய மாணவனின்வாழ்த்துச் செய்தி

தி.ஜனகன்
(பழைய மாணவன்,சட்டத்தரணி)

அடக்கமும் அமைதியும் அன்பும் அரவ ணைப்பும் ஒருங்கே கொண்ட ஓர் அதிசய பிறவி யார் என்று கேட்டால் அது வேறுயா ருமல்ல எங்கள் ஆசிரியை, அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களே என்று தான் எவரும் சொல்வர்.உண்மையில் அத்தகு குணாம்சங்களையும் கொண்ட ஒருவர் எமக்கு ஆசிரியராக மட்டுமல்லாது ஓர் அன்னைக்கு நிகராக எம்மை வளர்த்தார் என்றால் மிகையாகாது.

எனது பாடசாலையின் ஆரம்ப நாட்களி லிருந்து உயர் கல்வி கற்கும் வரைக்கும் எம்மில் அதீத அக்கறை கொண்டு இருந்து கற்பித்த ஒருவர் எனும் பெருமையும் இந்த ஆசிரியர் அவர்களையே சாரும். கணித பாடம் கற்பிக்க வந்த ஒருவர் ஓர் கலை ஞனை உருவாக்கினார், ஓர் மேடைப் பேச்சாளனை நெறிப்படுத்தினார், கவிஞ னுக்கு வழிகாட்டினார் என்றால் எவராவது நம்புவீர்களா? ஆனால் அதுவும் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களாலேயே சாத்தியமாயிற்று.

அவர் பற்றி மேற்குறித்தவாறு இன்னும் பல சிறப்புக்களையும் அவரது சாதனை களையும் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக ஒரு விடயத்தை மட்டும் கூறுகின்றேன் ஒருவரது விடாமுயற்சியும் கடின உழைப் பும் அவரை மேல் நிலைக்கு கொண்டு வரும் என்பதற்கு நான் நேரில் கண்ட சாட்சி எமது பெருமைக்குரிய அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களே. இந்த விடயம் இன்று யாவர்க்கும் தெரிந்த ஒன்று தான் ஆனாலும் என்னை மெய் சிலிர்க்க வைத்த விடயம் அவரது உழைப்பு ஒன்று தான் பல எதிர்ப்புக்கள் சோதனைகள் எல்லாவற்றையும் எதிர் கொண்டு அவற்றை வெற்றியும் கொண்டு இறு மாப்புடன் எதனையும் எதிர்க்கும் மன வலிமையினையும் கொடுத்துள்ளது எனும் போது அது பெருமையாகத்தான் உள்ளது.

கல்விச் சேவைக்கென்றே தன் வாழ் நாளை அர்ப்பணித்து இன்று ஓய்வு நிலைக்கு வந்திருக்கும் அதிபர் அவர்கள் தமது சேவைக் காலத்தில் எமது பாடசாலையான இமையாணன் அ.த.க. வித்தியால யத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன அவரது காலத்தில் நாம் கண்ட முன் னேற்றங்கள் அதிகம் இன்று அவருக்காக ஓர் மலரினை வெளியிடுவது சாலச்சிறந்த விடயமாகவுள்ளது. இத்தகு முயற்சியினை மேற் கொள்ளும் பாடசாலைச் சமூகத் தினர்க்கும் மணிவிழாக் குழுவினர் களுக்கும் எனது பாராட்டினையும் நன்றியி னையும் கூறுகின்றேன்.

மேலும் பாடசாலை சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள் இன்னும் பல சமூகப் பணிகளைப் புரிய அவர் இதே வலிமையுடன் நீண்ட காலம் உழைக்க பிரார்த்தித்து அவரை வாழ்த்தி வணங்குகிறேன்




# பழையமாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

**சி. வசந்தகுமார்**
தலைவர்,
பழையமாணவர் சங்கம்.

எமது வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர் களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன். பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி அரும்பணியாற்றியுள்ளார். எங்கள் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு. ம.குட்டித்தம்பி அவர்கட்குப் பின்னர் தொடர்ந்தும் இப்பாடசாலையை வளர்த் தெடுத்து இரவுபகலாக பாடசாலை யின் வளர்ச்சி பற்றியே சிந்தித்து செயற்பட் டுள்ளார்.

“செய்வன திருந்தச் செய்” என்ற முது மொழிக்கு இணங்க தன் பணியில் மிகுந்த ஈடுபாட் டோடும் அர்ப்பணிப்போடும் உழைத்து கல்வியில் மட்டுமின்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இப்பாடசாலையை வளர்த்தெடுத்துள்ளார். வாண்மை விருத்தியில் தன்னையும் படிப்படியாக வளர்த்துக் கொண்ட திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்கள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். தனது பணியின் இறுதிக் காலத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூாயில் பணியாற்ற விருப்புற்றவர் பல்வேறு போராட்டங்களின் பின் அதனை வெற்றி யாக்கியவர்.

இன்று ஓய்வு பெறும் வேளையில் அவரது ஓய்வுக் காலம் மிக அமைதியாகவும், ஆரோக்கியத்துடன் அமைய வேண்டு மென இறைவனை வேண்டுவதோடு எமது வித்தியாலயத்தின் தொடர் வளர்ச்சிக்கு தனது ஆலோசனை களை வழங்கி தனது ஓய்வு காலத்தையும் வெற்றிகரமாக கடக்க வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்



# அபிவிருத்திக் குழுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

க.முத்துராசா
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு

சமூகத்தில் சமூகநலன் கருதி ஆற்றப்படுகின்ற சேவைகள் நல்ல பதிவுகளாக இருக்க வேண்டும்.அப்பொழுது தான் அப்பதிவுகள் நிகழ்காலத்திற்கு மட்டுமின்றி எதிர்காலச் சந்ததிக்கும் வழிகாட்டக் கூடியதாக இருக்கும் அந்த வகையில் அதிபர் நவமணி சந்திரசேகரம் அவர்கள் கல்விப் புலத்திலே 36 வருடங்களை நல்ல பதிவுகளாகச் செவ்வனே நிறைவு செய்துள்ளார் என்பது வெள்ளிடை மலை. ஆசிரியப் பயிற்சிக் காலத்துடன் 17 வருடங்கள் ஆசிரியராகவும் 19 வருடங்கள் அதிபராகவும் சிறப்பாகக் கடமையாற்றி ஒய்வு பெற்றள்ளார்.

"முயற்சி திருவினையாக்கும்" என்பது ஆழ்ந்து சிந்தித்து அனுபவப்பட்ட விளைவின் சான்றுகளில் ஒன்று. அதை முதுமொழி என்று சொல்லுகின்றோம். இம் முதுமொழிக்கு அமைவாக எமது பாடசாலையின் சிறந்த கணித ஆசிரியராகவும் இருந்து இப்பாடசலை அதிபராக முன்னேற்றம் கண்டவர். தரம் I அதிபராக இப்பாடசாலையில் 19 வருடங்கள் சேவையாற்றி, இப்பாடசாலையின் தரத்தை நல்ல நிலையில் வைத்திருந்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது. மேலும் இவர் தனது முயற்சியால் முன்னேறி தரம் I அதிபராக உயர்வு பெற்றுள்ளார். இக்காலம் இவரது ஒய்வு நிலைக் காலமாக இருந்தாலும்,உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் சிறிது காலம் கடமையாற்றியமை என்பது ஓர் திருப்பு முனை என்றே கொள்ளலாம். தரம் I பாடசாலையின் அதிபராகச் சிறிது காலமென்றாலும் கடமையாற்ற வேண்டும் என்பதற்கு தற்துணிவும், விடாமுயற்சியுமே காரணம்.

பொதுவாக இவரது கல்விச் சேவைக் காலத்தின் பெரும்பகுதி எமது பாடசாலையிலேயே கழிந்துள்ளது என்பது குறிப்பிடதக்கது. இவரது சேவையானது வடமராட்சி மண்ணிற்கு பொதுவான தாகவும், எமது பாட சாலைக்கு சிறப்பானதாகவும் அமைந்தமை ஓர் பதிவாகும். இப்பதிவுகள் அதிபர், ஆசிரியர், மாணவர்கட்கு முன்னுதாரணமாகத் திகழும் என்பதில் நாம் பெருமையடைய முடியும்.

ஒருவருடைய நல்ல சேவைகள் அவருடைய எதிர்காலத்தை வளமாக்கும் என்பதால் இவருடைய எதிர் காலமும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை இவர் ஓய்வு பெற்றாலும் கல்வி மற்றும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு, குடும்பத்தோடு நீண்ட காலம் வாழ்ந்து சமூகத்திற்குச் சேவை செய்ய இம் மணிவிழாக் காலத்தில் எல்லாம் வல்ல இறைவனை எனது சார்பாகவும், பாடசாலை சார்பாகவும் வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



# மணிவிழா நாயகியும் என் மனப்பதிவுகளும்

**திருமதி கமலாதேவி பவளராசா**
பகுதித் தலைவர்
யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்

மணிவிழாக் காணும் எங்கள் பாட சாலையின் முன்னாள் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களுடன் நீண்ட காலம் பல்வேறு உறவுமுறைகளில் பழகியவள் என்ற வகையில் அவரை வாழ்த்துவதில் அகமகிழ்வடைகிறேன். நான் உடுப்பிட்டி மகளிர் கல்லூாயில் மாணவியாக கல்விகற்ற போது அதிபர் அவர்களும் அங்கே மாணவியாக, மாணவத் தலைவியாக, இல்லத் தலைவியாக செயற்பட்டார். மாணவ பருவத்திலிருந்தே எமது உறவு ஆரம்பமாகி பின் தொழில் ரீதியாகப் பலாலி ஆசிரிய கலாசாலையில் இரண்டாம் வருட ஆசிரிய மாணவியாகவும் நான் முதலாம் வருட ஆசிரிய மாணவியாகவும் சந்தித்துக் கொண்டோம். கலாசாலைக் காலம் நிறை வேறியதும் அதிபர் அவர்கள் மன்னார் மாவட்டத்திற்கும் நான் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் ஆசிரிய பணியாற்றச் சென்றோம். போக்குவரத்துப் பாதையில் சந்தித்துக் கொள்வோம்.

1991ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாரதண சூழ்நிலை காரணமாகத் தற்காலிகமாக இட மாற்றம் பெற்று இப்பாடசாலைக்கு நான் வந்த போது என்னை இன்முகம் காட்டி வரவேற்று அப்போதைய அதிபரிடம் என்னை அழைத்துச் சென்று அறிமுகப்ப டுத்தியவர் எமது அதிபராவார். அவர் அக்காலத்தில் இங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார். மாணவ பருவத்தில் தொடங்கிய எமது நட்பு ஆசிரியப் பருவத்திலும் தழைத்தோங்க தொடங் கியது. காலங்கள் உருண்டோடின. எமது அதிபர் உதவி அதிபராக, அதிபராகப் பதவியுயர்வுகள் பெற்றார். தற்காலிக இடமாற்றம் பெற்று வந்த இப்பாடசாலையே எனது நிரந்தப் பாடசாலையாகிவிட்டது. அதிபரவர்கள் முப்பது வருடங்கள் இங்கு பல பதவி நிலைகளில் பணியாற்றியுள்ளார். அவருடன் அதிக காலம் இங்கு பணி யாற்றியவர் என்ற ரீதியில் அவரது பணிச் சிறப்புக்கள்பற்றி நான் நன்கு அறிவேன். அந்த பசுமையான பதிவு களைப்புரட்டி பார்க்கும் போது இவர் இங்கு அதிபராக பதவியேற்ற போது எமது பாடசாலையானது பாடவிதானச் செயற்பாடுகளிலும் இணைப் பாட விதானச் செயற்பாடுகளிலும் தமக்கென தனியொரு பெயரினைப் பதிவு செய்த கால மாகவே உள்ளது. உடற்பயிற்சி போட்டி ,வலைப்பந்து, தாச்சிப் போட்டி, இல்ல

மெய்வன்மை போட்டி என்பவற்றின் போது விளையாட்டுத்துறை ஆசிரியர் இல்லாத காலங்களில் நாம் இருவரும் இணைந்தே மாணவர்களினைப் பயிற்றுவிப்போம் விளையாட்டுத்துறை ஆசிரியர் நியமிக்கப் பட்ட பின்னர் அவருடன் இணைந்து செயற் பட்டோம். அதன் பயனாக உடற்பயிற்சிப் போட்டிகான எமது பாடசாலை அணி மாவட்ட மட்டங்களில் வெற்றி பெற்றதனை நாம் யாவரும் அறிவோம். நாட்டு கூத்துப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றி கிடைத்தது சமூக விஞ்ஞான போட்டியில் தேசிய மட்டத்தில் விருது கிடைத்தது. ஆங்கில தினப்போட்டியில் மாகாண மட்டத்தில் விருது கிடைத்துள்ளது.இவை போன்ற பல விருதுகள் இணைப் பாடவிதான செயற்பாட்டிற்காக இவரது காலத்திலேயே கிடைத்தமை இவரது சேவைக்கு கிடைத்த பெரு வெற்றியாகும் மேலும் பாடவிதான செயற்பாடுகளில் உன்னத நிலையிலேயே காணப்பட்டது. 2008ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தரம் 2 பாடசாலை வகையில் வலயமட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டமையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவை போன்ற பல சம்பவங்கள் இவர் அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் இங்கு நிகழ்ந்துள்ளன. எமது பாடசாலையின் பௌதீக வள விருத்தியில் அதிபரது பங்களிப்பு இமாலய சாதனை என்றே கூறுதல் வேண்டும். நான் இப்பாட சாலைக்கு வருகை தந்த போது 3 கட்டிடங் களும் கொட்டில்களுமே இருந்தன. மாணவர் கொட்டில்களுக்குள் மழை வெள்ளம் புகும் போது மாணவர் நனைந்து கொண்டு அணைகட்டுவார். கொட்டில்கள் ஒழுகும் இவ்வாறாகப் பெரும் இடர்பட்டே மாணவர்கள் கற்று வந்தனர். இந்நிலையை மாற்றும் வகையில் அரச/அரச சார்பற்ற நிறுவனங்களை நாடி இன்று கம்பீரமாகக் காட்சி தரும் மாடிக் கட்டிடங்களை அமைப்பதற்கு அயராது பாடு பட்டு உழைத்த பெருமை எமது அதிபரையே சாரும் மேலும் மின்சார வசதி கணனி வசதி எனப் பல்வேறு வகையான வள வசதிகளைப் பெற உழைத்தவர் அதிபரே ஆவார். மேலும் இவரது காலத்தில் தான் எமது பாடசாலையில் புலம்பெயர் பழைய மாணவர்களின் உதவியுடன் பாடசாலைக்கு சுற்று மதில் அமைக்கப்பட்டு வனப்புறு தோற்றத்துடன் காணப்படு கின்றமை இவரது அயரா முயற்சியின் இன்னொறு சான்றாக கூறிக் கொள்ளலாம்.

இன்முகமும் அன்பும் கனிந்த மொழி களும் நேரிய சிந்தனையும் மிகுந்த ஆளு மையும் கொண்ட எமது அதிபரவர்களது சேவை இப் பாடசாலையில் மூன்று தலை முறைகளுக்கு கிடைத் துள்ளது. இப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பலர் இன்று அரச உயர் பதவிகளினை அலங்கரிக்கின்றனர். இவரது காலத்தில் கல்வி கற்ற மாணவர்கள் பலர் ஆசிரியர் களாகவும், சட்டத்தரணிகளாகவும், முகாமைத்துவவியலாளர்களாகவும் ஆயுர்வேத வைத்தியர்களாகவும் இன்னும் பல தொழில்களினை அலங்கரிப்பவர்களாக உள்ளனர் எமது மாணவர்களினைப் பொறியியலாராகவும் வைத்தியர்களாகவும் உருவாக்க வேண்டும் என எமது அதிபர் கூறுவார். அவரது கனவு நனவாகும் நாள் வெகுதொலைவிலில்லை. எமது பாட சாலையின் கலைத்திட்ட விருத்திச் செயற்பாடு என்றாலென்ன பௌதீகவள


விருத்திச் செயற்பாடென்றால் என்ன அதிபரவர்களது காலத்தில் உன்னத நிலையினையே எட்டியுள்ளது என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இவற்றுக் கெல்லாம் அவரது நிறைந்த ஆளுமையும் அற்பணிப்புமிகு செயற்பாடுகளுமே காரணம்.

அதிபருக்கும் எனக்கும் இடையேயான நட்பின் நிமிர்த்தமாக அவருடைய குடும்பத்தாருடன் பழகும் சந்தர்ப்பமும் எனக்கு ஏற்பட்ட பின் அவர்களது குடும்பத்தில் நிகழும் அனைத்து நிகழ்வு களிலும் நானும் எனது குடும்பத்தில் நிகழும் அனைத்து நிகழ்வுகளிலும் அவர்களும் பழகும் தன்மையும் குடும்ப ரீதியான ஐக்கிய நிலை உருவாக்கியது. இது எமது தொடர்பை மேலும் வலுவாக்கியது. பல இடபாடுகளுக்குப்பிற்பாடு 16.06.2014 அன்று எமது பாடசாலையினின்றும் நீங்கி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிவரும் எமது பாடசாலையின் முன்னைனாள் அதிபர் என்பதா? நல்ல நண்பி என்பதா? நல்ல வழிகாட்டி என்பதா? கிடைத்தற்கரிய உறவென்பதா? எவ்வாறு அழைப்பது என்றே எனக்குக் குழப்பமாக இருக்கின்றது. அவ்வளவு தூரம் எம்முடன் ஒன்றாகப் பணியாற்றி எமை நெறிப்படுத்திய பெருமாட்டிக்கு இன்று மணிவிழா. எமது அதிபர் பல செல்வங்களையும் பெற்று பல்லாண்டு காலம் நீடு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்திக்கொண்டு இன்றைய இம் மணிவிழா நாளில் எனது பதிவுகளையும் பகிர்ந்து கொள்ள வாய்ப் பளித்த மணிவிழா மலர்க்குழுவினர்க்கு என் இதயம் கனிந்த நன்றிகள் தெரிவித்து நிறைவு கொள்கின்றேன்.









# வாழ்க பல்லாண்டு


–சி.பத்மராஜன்
தலைவர்,
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்


அகவை அறுபதினை அணிகொள்ளும் பேறுபெற்று
அகமகிழ் மணிவிழாவின் அரங்கினிலே புகழ்காணும்
பவ்வியமாய் பாடசாலையில் பவனிவரும் புன்னகையாள்
நவமணி சந்திரசேகரம் வாழ்கவே பல்லாண்டு!

தன்நலம் பேணாது மாணவரும் ஆசிரியரும்
நன்னெறி நின்றுமே திண்ணமாய் உயர்வுபெற
மனத்திடம் கொண்டு மாண்புமிகு சேவைதனை
மனமாரச் செய்திடும் மாண்புடையாள் வாழியவே!

காண்பவரைக் கவர்ந்திடும் வசீகர முகம் கொண்டு
காரியத்தைக் கச்சிதமாய் முடித்திடும் தீரமகளே
இன்முகம் காட்டியே இன்னா செய்தினும் மன்னித்து
பக்குவமாய் பல சேவை புரிந்திட்டாய் வாழி நீ!

வெள்ளிவிழா வருடங்கள் வெற்றிகரமாய் பலன்பெற்ற
துள்ளித்திரியும் பாலர்முதல் பல்கலைப்பட்டதாரி வரை
எள்ளளவும் உடைமறவாது உன்பணியை நினைத்திடும்
நன்னாளாம் இன்று நலன்புரிச்சங்கத்தின் பலகோடி வாழ்த்துகள்!

# திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்களின் விபரக் குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | :- திருமதி நவமணி சந்திரசேகரம் |
| 2. | பிறப்பு | :- 26.07.1954 |
| 3. | பிறந்த இடம் | :- உடுப்பிட்டி |
| 4. | பெற்றோர் | :- தந்தை கு. சின்னக்கண்டு<br>தாய் - சி. இராசம்மா |
| 5. | குடும்பம் | :- கணவன் - முருகேசு சந்திரசேகரம் |
| 6. | கல்வி | :- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி<br>(ஆரம்பக் கல்வி- க.பொ.த(சா/த)<br>யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி<br>(உயர் தரம்)<br>பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை<br>(உயர் கல்வி) |
| 7. | பட்டங்கள் | :- Sp.Trained (Maths)<br>B.Ed (Maths)<br>SLPS-I |
| 8. | ஆசிரியர் சேவை | :- யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்<br>01.06.1978 31.12.1981<br>ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (பலாலி)<br>01.01.1982 - 31.12.83<br>மன்/சென் லோறன்ஸ் றோ.க.த.க பாடசாலை<br>தலைமன்னார்<br>01.01.1984 31.12.1986 |

மன்/விடத்தல் தீவு அலிகார் மகா வித்தியாலயம்
01.01.1987 - 31.03.1989
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்
01.04.1989 - 30.05.1991

9. அதிபர் சேவை :- யா/இமையாணன் அ.த.கவித்தியாலயம்
SLPS III
01.06.1991 - 31.05.1994
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம் SLPS 2-II
01.06.1994 - 31.12.1996
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம் SLPS 2-I
01.01.1997 - 30.05.2004
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம் SLPS I
01.06.2004 - 15.06.2014
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி SLPS I
16.06.2004 - 26.07.20014

## விழா நாயகியின் காலத்து இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் சாதனைகளும்

விளையாட்டு:-

கரப்பந்தாட்டம்: 1990ம் ஆண்டிலிருந்து 2009ம் ஆண்டு வரை 17 வயதுப் பிரிவு ஆண்கள் அணி மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. 2009ம் ஆண்டு 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணிமாவட்ட மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

உடற்பயிற்சி: 1990ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை ஆண்கள் அணி மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது அத்துடன் மாவட்ட மட்ட தெரிவுப்போட்டியில் இடம்பெற்றுக்கொண்டது. அதில்

1993ம் ஆண்டு 15 வயதுப் பிரிவு 1ம் இடம்
1994ம் ஆண்டு 15 வயதுப் பிரிவு 1ம் இடம்
1994ம் ஆண்டு 17 வயதுப் பிரிவு 1ம் இடம்
1995ம் ஆண்டு 19 வயதுப் பிரிவு 1ம் இடம்

உடற்பயிற்சி பெண்கள் அணியானது 2003ம் ஆண்டு மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியதுடன், மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

மெய்வல்லுநர்: 2009ம் ஆண்டு வரை மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் மாவட்ட மட்டத்திற்கு பல மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். மெய்யழகன்- பிரதீபாஎன்பவர் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் 1997ம் ஆண்டு 17

வயதுப் பிரிவில் 1ம் இடமும்,1998ம் ஆண்டு 18 வயதுப் பிரிவில் 1ம் இடமும், பெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றினார்.

1997ம், 1998ம் ஆண்டுகளில் இ.அனிதன் என்பவர் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி சிறந்த வீரராக தெரிவானார். அத்துடன் 1999ம், 2000ம், 2001ம் ஆண்டுகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் நிகழ்வுகளில் மாவட்ட மட்டத்தில் 1ம், 2ம் இடங்களை பெற்றுக்கொண்டார்.

2001ம் ஆண்டு மாகாண மட்டத்தில் செல்லக்கண்டன் - செந்தீஸ்வரன் 15 வயதுப்பிரிவில் உயரம் பாய்தலில் பங்குபற்றினார்.

2002ம் ஆண்டு 15 வயதுப் பிரிவில் அஞ்சல் ஓட்ட அணி மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது.

01) மனோகரன் - மைக்கல்
02) நவரத்தினம் - கஜேந்திரன்
03) ரகுநாதன் - பிரதீப்
04) ஜீவன் - ஜெகநாத்
05) இராசமாணிக்கம் - தீபாகரன்
06) அருளானந்தம் - சியாமளன்

2003ம் ஆண்டு 15 வயதுப் பிரிவில் அஞ்சல் ஓட்ட அணி மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தை பெற்றுக் கொண்டது.

01) இ.தீபாகரன்
02) செ.செந்தீஸ்வரன்
03) மு.கிரிசாந்
04) அ.சுஜீவன்
05) ப.பானுசந்தர்
06) ந.கஜேந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்

2004ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் மாகாணமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு சென்று பங்குபற்றியுள்ளார்கள்.

01) நவரத்தினம் - கஜேந்திரன் (தத்தி மிதித்து பாய்தல்)
02) முருகன் - கிரிஷாந் ( கோலூன்றி பாய்தல்)

2004ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் மாவட்ட மட்ட போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று, மாகாணமட்ட போட்டியில் பங்குபற்றியுள்ளார்.

01) தெய்வநாதன் - இந்துக்கான்
02) நவரத்தினம் - கஜேந்திரன்
03) அசேகன் - மகிந்தன்
04) அருந்தவராசா சுஜீவன்
05) ரகுநாதன் - பிரதீப்

06) இராசமாணிக்கம் - தீபாகரன்

2005ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்

01) நவரத்தினம் - கஜேந்திரன்

2012ம் ஆண்டு மதிகரன் - ஜெசிகரன் 5000 மீற்றர் மாவட்டமட்டம் - 6ம் இடம், மாகாண மட்டம் - 11ம் இடம்

தமிழ்த்தினப் போட்டி: வலய மட்டத்தில் பங்குபற்றி இடங்களைப் பெற்றதோடு, சில நிகழ்வுகள் மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன. மாவட்ட மட்டத்தில் இடம் கிடைத்தோர் விபரம்:-

| | | |
|---|---|---|
| 1995ம் ஆண்டு | 1ம் இடம் | - நாட்டுக்கூத்து |
| 1999ம் ஆண்டு | 1ம் இடம் | - நாட்டுக்கூத்து |
| 2000ம் ஆண்டு | 2ம் இடம் | - நாட்டுக்கூத்து |
| 2009ம் ஆண்டு | 3ம் இடம் | - கட்டுரை ( செ.கீர்த்தனா தரம் 9 ) |

(2007 சிவகுமார் - அபர்ணா மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகினார்.)

(2007 குழு இசை மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.)

2013ம் ஆண்டு பிரபாகரன் - பிரவீனா திருக்குறள் போட்டி மாவட்டமட்டம் 1ம் இடம்

ஆங்கிலதினப் போட்டி: வலய மட்டத்தில் பங்குபற்றி இடங்களைப் பெற்தோடு, சில நிகழ்வுளில் மாவட்டமட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

மாவட்டமட்டத்தில் இடம் கிடைத்தோர் விபரங்கள்

1999ம் ஆண்டு ந.சாமினா ஆங்கில எழுத்து 1ம் இடம் மாகாணமட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

2004ம் ஆண்டு இ.சாருமதி, கோ.மகிழ்ப்பிரியா ஆகிய இருவரும் ஆங்கில எழுத்துப் போட்டியில் மாவட்டமட்டத்திற்கு தெரிவாகினர்.

2006ம், 2007ம் ஆண்டுகளில் செ.கீர்த்தனா கட்டுரை போட்டடியில் மாவட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

2014 ம் ஆண்டு வலயமட்ட ஆங்கில தினப்போட்டி

| | |
|---|---|
| 01.பிரபாகரன் - பிரவீனா | 2ம் இடம் |
| 02.கேசவதாஸ் - திவானி | 2ம் இடம் |
| 03.தவக்குமார் - மதுமிதா | 1ம் இடம் |
| 04.இந்திரராசா தசான | 2ம் இடம் |
| 05.இராசேந்திரன் - வந்தனா | 1ம் இடம் |
| 06.கதிர்காமத்துலிங்கராசா கஜானா | 3ம் இடம் |
| 07.முத்துராசா நிதுர்சிகா | 3ம் இடம் |

சமூகக்கல்விப் போட்டி :- வலயமட்டத்தில் பங்குபற்றி இடங்களைப் பெற்றதோடு, சில நிகழ்வுகளில் மாவட்டமட்டத்திற்கு தெரிவாகி மாகாண, தேசிய மட்டங்களில் இடங்களைப் பெற்றுள்ளனர்.

2002ம் ஆண்டு குட்டித்தம்பி குணாளன் 1ம் இடம் தேசிய மட்டம் (தங்கப்பதக்கம்)

2005ம் ஆண்டு செல்வரத்தினம் - செல்வரூபன் 3ம் இடம் மாகாணமட்டம்.

2014ம் ஆண்டு ஜெ.சாருஜன் பங்குபற்றியிருந்தார்

விஞ்ஞான போட்டிகளில்:-2003ம், 2004ம் ஆண்டுகளில் அகில இலங்கையில் விஞ்ஞான முன்னேற்றச்சங்கத்தால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வினா விடைப் போட்டியில் வலயமட்டதில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

2008ம் ஆண்டு செல்வரத்தினம் - நிரோஜன் புத்தாக்கமாக கருவிக் கண்காட்சி (Torch withoud battery) கலமில்லாத மின்சூழ் என்ற கருவியை செய்தமைக்கான விசேட திறமைச் சான்றிதழையும் 1000 ரூபா பணப்பரிசிலையும் பெற்றுக்கொண்டார்

கல்வி பொது தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றும் பகுப்பாய்வும் உயர் பெறுபேறுகளும்

| | | |
|---|---|---|
| 1995 -24% | - சுப்பிரமணியம் - சதீஸ்வரன் | 3D,2C,2S |
| 1996 -13% | - கிருஸ்ணானந்தி கோபாலகிருஸ்ணன் | 3D,2C,S |
| 1997 -27% | - அஞ்சலா சிவகுமார் | 6D,C |
| 1998 -31% | - திருநாவுக்கரசு திலீபன் | 6D,2C |
| 1999 -32% | - சாமினா - நவரத்தினம் | 3D,6C,S |
| 2000 -32% | - தங்கவேல் - கரிகாலன் | 3D,5C,S |
| 2001 -26% | - குட்டித்தம்பி குணாளன் | 5A,4B,C |
| 2002 -27% | - நர்மதா மகேந்திரன் | 3A,B,5C,S |
| 2003 -38% | - பிரசாந்தினி - இராசன் | 7A,B,C,S |
| 2004 -32% | - கிருஸ்ணப்பிரியா கோபாலகிருஸ்ணன் | 10A |
| 2005 -32% | - செல்வரத்தினம் - செல்வரூபன் | 7A,2B,C |
| 2006 -35% | - சிவம் - கார்த்தியானந் | 7A,B,2C |
| 2007- 48% | - இராமலிங்கம் - ஜெசிந்தன் | 8A,B,C |
| 2008 -63% | - செல்வரத்தினம் - நிரோஜன் | 5A,B,3C |
| 2009 -44% | - கோபாலகிருஸ்ணன் - புவிசாந் | 5A,4B |
| 2010 -51% | - அபர்ணா சிவகுமார் | 5A,2B,2C |
| 2011 -51% | - கீர்த்தனா செல்வரட்த்தினம் | 9A |
| 2012 -58% | - அசோகன் - மாதுளன் | 4A,4B,C |
| 2013 -32% | - தனுஜா சிவஞானேஸ்வரன் | 5A,B,3C |

## GENERAL ACHIEVEMENTS OF J/IMAIYANAN G.T.M.V

- 1994 U 15 Boys PT Competition District Champion.
- 1995 U 17 Boys PT Competition - District Champion.
- 1995 Tamil Day Competition (Sinthu Nadai) District level 1$^{st}$ Place.
- 1999 - Tamil Day Competition (Sinthu Nadai) District level 1$^{st}$ Place.
- 1999 English Day Competition N.Shamina got Gold Medal For copy writing in provincial level.
- 2000 - Tamil Day Competition (Sinthu Nadai) District level 2$^{st}$ Place.
- 2002 Grade 11 K.Gunalan got 1$^{st}$ place in National level for Social studies and General knowledge Competition and got National award a Gold Medal.
- 2003 All Ceylon Science Improvement Club quiz competition. 1$^{st}$ place
- 2003 U 19 Boys PTcompetition 3$^{rd}$ place
- 2004 - All Ceylon Science Improvement Club quiz competition. 1$^{st}$ place
- 2004 G.C.E O/L G.Krishnapriya got 10A
- 2008 Type 2 School External Evaluation - 2$^{nd}$ place
- 2010 - Type 2 School athletic & Game Boys Champion
- 2010 - Type 2 School athletic & Game Girl Champion
- 2011 - Tamil Day Competition (Sinthu Nadai) District level 3$^{rd}$ Place
- 2011 - Type 2 School athletic & Game Boys Champion
- 2011 - G.C.E O/L S.Keerthana got 9A
- 2012 PT Competition Zonal Level 2$^{nd}$ Place

# பதிவுகள்


































பாடசாலை அன்று


பாடசாலை இன்று















ஆகாயம் பதிப்பகம்

படம்- யாத்திரீகன்